**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.119/2019**

2026 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 –ம் நாள் வாதிகள் தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**<u>நாள் : 27.02.2026</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.காரல் மார்க்ஸ் (PW–1) | வயது | : | 42/2025 |
| த/க. பெயர் | : | திரு. துரைகண்ணு | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | | மன்னார்குடி |

**இந்நீதிமன்ற IA.No.563/2025 மற்றும் IA.No.565/2025 நாள் 20.02.2026 மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சியானவர் மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்டது.**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

06.03.1991 அன்று மன்னார்குடி நகராட்சி ஆணையரால் செல்வானந்த நகருக்கு வழுங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட அனுமதி நகல் ஆவணத்தை அசல் ஆவணத்துடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்ய, பிரதிவாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர்கள் அசல் ஆவணமானது நகரமைப்பின் கிரயம் பெற்றவருக்கு வழங்கப்படாது என்பதால் இந்த அசல் ஆவணமானது வாதிக்கு எவ்வாறு வந்தது என்பதற்கான காரணத்தை குறிப்பிடாமலும், மேற்கண்ட ஆவணத்தில் வரைவாளரோ உரிமையாளரோ வாதி இல்லாததால் வாதியின் மூலம் குறியீடு செய்ய முடியாது என ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டதால், பிரதிவாதிகளின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட ஆவணமான வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பிரதிவாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 17:51:31 +0530

District Munsif
Mannargudi.